சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 26 (LW-47) | நாள் | |
| பெயர் | தனபால் | தொழில் | |
| தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

(குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.03.2024 அன்று நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 161/2024 வழக்கில் சம்பந்தப்பட்ட இறந்துபோன அஜித்குமார், த/பெ. லோகநாதன், கலைஞர் காலனி, மயிலாடுதுறை என்பவரின் உடலானது பிணகூறாய்விற்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. 21.03.2024 அன்று 10.05 மணிக்கு கடவுச்சீட்டு கொடுக்கப்பட்டு பிணக்கூறாய்விற்காக மருத்துவரிடம் காவல் மயிலாடுதுறை காவல் துணைக்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் ஒப்படைத்தேன். இறந்து போன அஜித்குமாரின் உடலை அடையாளம் காண்பித்து பிரே பரிசோதனை செய்யும் முன் அவர் அணிந்திருந்த உடைகளையும் பின்னர் பிரேத பரிசோதனை முடிக்கப்பட்டு சேகரம் செய்யப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை நீதிமன்ற கடிதத்துடன் மருத்துவர் கொடுத்த கடிதத்துடன் 04.04.2024 அன்று தஞ்சாவூர் தடயஅறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். 10.04.2024 அன்று அஜித்குமார் உடுத்தியிருந்த உடைகளை நீதிமன்ற கடிதத்துடன் தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்தில்

ஒப்படைத்தேன். அதேபோல் மாதிரி இரத்தம் துணிகளில் நனைத்து திருச்சி வட்டாரா தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். 14.04.2024 அன்று மயிலாடுதுறை துணைக்காவல் கண்காணிப்பாளரிடம் அறிக்கை சமர்பித்தேன். அவர் என்னை விசாரித்தார்.

குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் வழக்கறிஞர்கள் முன்னிலை. குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

30/6/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220 /2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 27 (LW-48) | நாள் | |
| பெயர் | முத்துலட்சுமி | கிராமம் | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| தாலுக்கா | | வயது | |

1 முதல் 10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர் படுத்தப்பட்டனர்.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைகாவலராக பணியாற்றி வருகிறேன். இரண்டாம் நிலைக்காவலராக பணியில் இருந்தபோது 21.03.2024 அன்று அதிகாலை 2.30 மணிக்கு மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 161/2024 என்ற வழக்கின் விசாரணை அதிகாரியான மயிலாடுதுறை காவல் துணைக்கண்காணிப்பாளர் இந்த வழக்கில் புலன் விசாரணை செய்ததை வாய்மொழியாக என்னிடம் தெரிவித்தார். அதை நான் கணிப்பொறியில் தட்டச்சு செய்தேன். பின்னர் Print எடுத்துக்கொடுத்தேன். இது சம்பந்தமாக என்னை மயிலாடுதுறை காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**5 முதல் 8 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சொல்வது போல் காவல் துணைக்காணிப்பாளர் என்னிடம் எந்த தகவலும் சொல்லவில்லை என்றாலும் ஆவணத்தில் உள்ளதுபோல் நான் எந்த தட்டச்சும் செய்து தரவில்லை என்றால் சரியல்ல.

மற்ற குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

30/6/

மாவட்ட நீதிபதி

மயிலாடுதுறை